செ.வெ.எண்: 41 நாள்: 27.03.2017

# அரியலூர் மாவட்டத்தில் கோடைக்காலங்களில் குடிநீர் தட்டுப்பாடுயின்றி விநியோகம் செய்வதை கண்காணித்திட கிராம ஊராட்சி வாரியாக அலுவலர்கள் கொண்ட குழு அமைத்து அவர்கள் மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆலோசனைக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (27.03.2017) நடைபெற்றது.

அரியலூர் மாவட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், **சீரான குடிநீர் விநியோக செய்யவதை கண்காணித்திட** வருவாய்த்துறையில் வட்டாட்சியர்கள் மற்றும் வளர்ச்சித்துறையில் வட்டார வளர்ச்சி அலுவலர், துணை வட்டார வளர்ச்சி அலுவலர், ஊராட்சி செயலர்கள் கொண்டு **24 குழுக்கள்** அமைக்கப்பட்டு, மேற்கண்ட அலுவலர்களுக்கு 7 முதல் 10 ஊராட்சிகள் ஒதுக்கிடு செய்யப்பட்டு, ஊராட்சியல் உள்ள குடிநீர் விநியோகம் குறித்து தினந்தேறும் நேரடி தணிக்கை செய்து, நிர்ணயிக்கப்பட்ட குடிநீர் விநியோகம் செய்வதை ஆய்வு மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும், அரியலூர் மாவட்டத்திலுள்ள கைப்பம்பு மற்றும் ஆழ்துளாய் கிணறுகளில் ஏதேனும் பழுதுகள் ஏற்பட்டால் உடனுக்குடன் சரிசெய்திட வேண்டும் எனவும், மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளுக்கு தண்ணீர் ஏற்ற பயன்படுத்தப்படும் மின்மோட்டார்கள் பழுது ஏற்பட்டாலும் உடனடியாக சரிசெய்திடவும், குடிநீர் தட்டுபாடு அதிகமாக உள்ள இடங்களில் புதியதாக கைப்பம்பு மற்றும் ஆழ்துளாய் கிணறுகள் அமைத்திட உடனடியாக திட்ட மதிப்பீடு தயார் செய்து மாவட்ட நிர்வாகத்திற்கு அனுப்பிடவும், முழுவதுமாக பழுது ஏற்பட்டுள்ள கைப்பம்பு மற்றும் ஆழ்துளாய் கிணறுகளுக்கு பதிலாக புதிதாக கைப்பம்பு மற்றும் ஆழத்துளாய் கிணறுகள் அதைத்திடவும் அறிவுருத்தப்பட்டுள்ளது.

கிராமப்புறங்களில் குடிநீர் விநியோகம் குறித்து புகார்களை 6 ஊராட்சி ஒன்றிங்களில் பிரத்தியேக கட்டுப்பாட்டு அறை செயல்படுத்தப்பட்டு வருகிறது. அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் குடிநீர் தட்டுப்பாடு தலைமை மைய கட்டணமில்லா தொலைபேசி எண்.04329 - 1077 மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கைப்பேசி எண்களான, அரியலூர் ஊராட்சிக்கு **7402607747,** திருமானூர் ஊராட்சிக்கு **7402607750,** செந்துறை ஊராட்சிக்கு **7402607754,** ஜெயங்கொண்டம் ஊராட்சிக்கு **7402607758,** ஆண்டிடம் ஊராட்சிக்கு **7402607762,** தா.பழூர் ஊராட்சிக்கு **7402607764,** மேலும், குடிநீர் குறித்த தகவல்களை தெரிவிக்க மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களை தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்.9047992233, திட்ட இயக்குநர் ஊரக வளர்ச்சி முகமை அவர்களை தொடர்பு கொள்ள வேண்டிய எண்.7373704219, உதவி இயக்குநர் ஊராட்சிகள் அவர்களை தொடர்பு கொள்ள வேண்டிய எண்.7402607736 ஆகிய தொலைபேசி எண்ணிற்கு தகவல்களை அளிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.தனசேகரன், திட்ட இயக்குநர் ஊரக வளர்ச்சி முகமைத் திட்டம் திருமதி.லோகேஸ்வரி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.ரெங்கராஜன், உதவி இயக்குநர் ஊராட்சிகள் திரு.பழனிசாமி மற்றும் வட்டாட்சியர், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

செய்தி வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.